நீங்கள் சுட்டிக்காட்டும் ஒவ்வொரு முறையும் எங்கள்மீது அதிக நம்பிக்கை வைத்து, நீங்கள் வைக்கக்கூடிய நினைவூட்டல் என்றே நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

மேலும், ஒன்றை இந்த அவையில் மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். நமது அரசு சொன்னதை மட்டுமல்ல, சொன்னதற்கு மேலும் செய்து காட்டும் அரசு என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக ஒரு கருத்தை இந்த அவையில் பதிவிட விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் கடந்த 10 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றாமல் போன அறிவிப்புகளில் மக்களுக்கு மிகவும் பயன்படும் தேவைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு” என்ற பேரறிஞர் அண்ணாவின் வாக்கிற்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி, அவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அளித்து நன்றி கூறி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. தகவல் கோரல்

(அ) விருதுநகர் மாவட்டம், பாலியல் வன்முறை குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த 110 விதியின்மீது விவாதம் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில முக்கிய நிகழ்வுகள் குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிருக்கின்றார்கள். சுருக்கமாக அரசினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர், கஸ்தூரிபாய் நகரைச் சேர்ந்த 22 வயது பெண்ணுடன், பெருமாள் கோயில் பகுதியைச் சேர்ந்த ஹரிஹரன் என்பவர் பழகி வந்துள்ளார். தனிப்பட்ட முறையில் அவருடன் பழகிவந்த ஹரிஹரன் இரகசியமாக வீடியோ எடுத்துள்ளார். பின் வீடியோவை வைத்து மிரட்டி, பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டு, அந்த வீடியோவை அவருடைய நண்பர்களுக்கு, முக்கியமாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஜுனைத் அகமது, மாடசாமி மற்றும் நான்கு பேருக்கும் அனுப்பியுள்ளார். இவர்கள்

2022 மார்ச் 23] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

6 மாத காலமாக பாலியல் வன்முறையில் ஈடுபட்டு, கூட்டு பலாத்காரம் செய்துள்ளனர். இதுபோன்று எத்தனை பெண்களை அவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார்கள் என்பது தெரியவில்லை. இதை முறையாக விசாரித்து, இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குக் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேலூர், சி.எம்.சி. மருத்துவமனை மருத்துவர்கள் மீது தாக்குதல் மற்றும் பாலியல் வன்முறை

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அடுத்து, இந்த வாரம் வேலூர், காட்பாடியில் இரவுக் காட்சி பார்த்துவிட்டு, ஓர் ஆண் மருத்துவர் மற்றும் ஒரு பெண் மருத்துவர் ஆட்டோவில் வீடு திரும்பியபோது, ஆண் மருத்துவரை தாக்கிவிட்டு, பெண் மருத்துவரைக் கடத்திச் சென்று, கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இதுகுறித்து புகார் வரப் பெறவில்லை என்றும், குற்றம் செய்தவர்களை விசாரித்துவிட்டு, காவல் துறை விடுவித்துவிட்டதாகவும் தகவல் தெரிகிறது. குற்றம் செய்தவர்களே குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், காவல் துறையினர் குற்றம் செய்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இரண்டாவது சொன்னதற்குப் புகார் இருக்கிறதா?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குத்தான் பதில் கேட்கின்றேன்.*

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு சொல்லட்டுமா அல்லது அப்புறம் சொல்லட்டுமா? சரி, நீங்கள் முடித்துவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முடித்துவிடட்டும்.*

2022 மார்ச் 23] [திரு. மு.க. ஸ்டாலின்]

அந்த நபர்கள் தனி பாதுகாவலரிடம் வாக்குவாதத்திலே ஈடுபட்டு, அவர்களுள் ஒருவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரைத் தாக்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றிருக்கிறார்கள். இதில் காயமுற்ற தனி பாதுகாவலர் திரு. சக்திவேல், வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்; நலமுடன் இருக்கிறார். இச்சம்பவம் குறித்து கே.கே. நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 341, 294பி, 324, 307, 506(ii)–ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். 'இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சென்னை மாநகர ஆணையருக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். இதுசம்பந்தமாக, நானே ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. சி.டி. செல்வம் அவர்களிடத்திலே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, விவரங்களை எல்லாம் கேட்டிருக்கிறேன்.

(அ) விருதுநகர் மாவட்டம், பாலியல் வன்முறை குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *அடுத்து, விருதுநகரைப் பற்றி ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். விருதுநகரிலே 22 வயது பெண்ணிடமிருந்து பாலியல் வன்முறை புகார் வந்தவுடன், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 4 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 4 பேர் சிறார் நீதிமன்றத்தின் கூர்நோக்கு இல்லத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக, தற்போது வழக்கு மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவு–சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.சி.ஐ.டி. கண்காணிப்பாளர் திருமதி முத்தரசி அவர்கள் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கு தனி நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விரைந்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்படும். அதுவும் அதிகபட்ச தண்டனை பெறப்படும் என்பதை ஆணித்தரமாக, உறுதிபட இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 மார்ச் 23

இந்தப் பாலியல் வன்முறை வழக்கினை ஒரு “மாடல் வழக்காக” நேரடியாக கண்காணிக்குமாறு காவல் துறைத் தலைவர் (D.G.P.) அவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். நிச்சயம், பொள்ளாச்சி பாலியல் வழக்குபோல் இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) வண்ணாரப்பேட்டை 13 வயது சிறுமி பாலியல் வன்முறை வழக்குபோல் இல்லாமல், இந்த வழக்கு நிச்சயம் முறையாக நடத்தப்படும்.

இந்த அரசு எப்படி தண்டனை வாங்கிக் கொடுக்கிறது; இந்த மாநிலத்திற்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவிற்கே இந்த வழக்கு “விரைந்து தண்டனை பெற்றுத் தருவதில்” ஒரு முன்னணி வழக்காக மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று தவறு செய்யக்கூடியவர்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்கப் போகிறது. பொறுத்திருந்து பாருங்கள். இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இங்கே இருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களுக்கும் நான் உறுதியோடு தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இரண்டு விஷயத்தை மட்டும் எழுப்ப அனுமதி கேட்டார்கள். அ.தி.மு.க.-வினுடைய கொறடா அவர்கள், வேலூர் விஷயம் பற்றி எனக்கு தகவல் சொல்லவில்லை. நீங்கள் அதற்கும் விளக்கம் கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதற்கும் பதில் சொல்லிவிட்டார்கள், நன்றி.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு சரியாக பதில் சொன்னதற்குப் பிறகு, இது தேவையில்லை. (குறுக்கீடு) இல்லை, முடிந்தது. (குறுக்கீடு) இல்லை, இது அவைக் குறிப்பில் ஏறாது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுங்கள். நிறைய பேச வேண்டியிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.